# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 10281579

1. District: TIRUNELVELI PS: DCB Year: 2023 FIR No. 1 Date: 17-04-2023
மாவட்டம் காவல் நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. Act(s)
சட்டம்

| Act | Sections பிரிவுகள் |
|---|---|
| INDIAN PENAL CODE, 1860 | 323 |
| INDIAN PENAL CODE, 1860 | 324 |
| INDIAN PENAL CODE, 1860 | 326 |
| INDIAN PENAL CODE, 1860 | 506(1) |

3. (a) Occurrence of Offence Day: THURSDAY Date From: 23-03-2023 Date To:
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period: On Time from: 10.00Hrs Time To:
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information received at PS. Date: 17-04-2023 Time: 12.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference: Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time:
நேரம்

4. Type of Information: WRITTEN
தகவலின் வகை

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: WEST & 36.0 Km Beat Number:
குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் முறைக் காவல் எண்

(b) Address: கல்லிடைக்குறிச்சி காவல் நிலையத்தில் வைத்து
முகவரி

(c) In case, outside limit of this Police Station, then the Name of P.S: District:
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர் மாவட்டம்

6. Complainant/Informant (a) Name: SUBASH E (c) Date/Year of Birth: 1998 (d) Nationality: INDIA
குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர் நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம்

(b) Father's/Husband's Name : ESAKKI
தந்தை / கணவர் பெயர்

(e) Passport No.: Date of Issue: Place of Issue:
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation:
தொழில்

(g) Address: VIJAYAGANAPATHY PILLAIYAR KOVIL BACKSIDE, DHANASEKARAN NAGAR, KTC NAGAR, PALAYANKOTTAI, TIRUNELVELI DISTRICT .
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்

1) BALVEERSINGH, ASP
மற்றும் சிலர்

8. Reasons for delay in reporting by the complainant/Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of the properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்

---

10. Total value of properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-1) 110544 Cps.(HCL-12E)

பணிந்து அனுப்புகிறேன்:- இன்று 17.04.2023ம் தேதி 12.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் பொன்.ரகு ஆகிய நான் திருநெல்வேலி மாவட்ட குற்றப்பிரிவில் பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ந.க.எண்.531/நமூனா/Genl/தபி/ திலி/2023 நாள் 17.04.2023 -ன் உத்தரவுபடி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, KTC நகர், தனசேகரன்நகர், விஜயகணபதி பிள்ளையார் கோவில் பின்புறத்தைச் சேர்ந்த இசக்கி என்பவர் மகன் சுபாஷ் (வயது 25) என்பவரின் மனுவின் மீது உரிய சட்டப்பிரிவுகளுடன் வழக்குப்பதிவு செய்ய அறிவுறுத்தியதின்பேரில், புகார் மனுவின் தன்மைக்கேற்ப, திருநெல்வேலி மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்- 01/2023 பிரிவு 323, 324, 326, 506(1) IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார்மனு விபரம் பின்வருமாறு. அனுப்புனர், E.சுபாஷ்(வயது 25), த/பெ.இசக்கி, விஜயகணபதி பிள்ளையார் கோவில் பின்புறம், தனசேகரன்நகர், KTC நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். பெறுனர், 1. உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், கல்லிடைக்குறிச்சி காவல் நிலையம், திருநெல்வேலி மாவட்டம். 2.உயர்திரு.காவல் கண்காணிப்பாளர் அவர்கள், திருநெல்வேலி மாவட்டம். மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். நான் மேலே கண்ட முகவரியில் என் மனைவி சங்கீதா மற்றும் இரு குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். தூத்துக்குடியில் ஒரு தனியார் நிதி நிறுவனத்தில் வசூல் ஏஜெண்டாக பணிபுரிந்து வருகிறேன். நானும் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த லெட்சுமிசங்கர், வெங்கடேஷ் ஆகியோரும் நண்பர்கள். எங்களுக்கும், தெற்கு பாப்பான்குளத்தைச் சேர்ந்த இன்னொரு வெங்கடேஷ் வகையறாவிற்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை ஏற்பட்டு, கடந்த 22.03.2023 ந் தேதியன்று மதியம் 3 மணிவாக்கில், கல்லிடைக்குறிச்சி தலைச்சேரியில் வைத்து எங்களுக்கும், பாப்பான்குளம் வெங்கடேஷ் தரப்பிற்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. பாப்பான்குளம் வெங்கடேஷ் எங்கள் மீது கல்லிடைக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் செய்து விட்டார். நாங்கள் 3 பேரும் பயந்து போய் மேலே கண்ட முகவரியில் உள்ள எங்கள் வீட்டில் அன்றிரவு தூங்கினோம். மறுநாள் அதாவது 23.03.2023 காலை சுமார் 8.15 மணியைப் போல எங்கள் வீட்டிற்கு வந்த போலீசார் பஷீர்,

இசக்கி மற்றும் இன்னொருவர், எங்கள் மூவரையும் தனியார் காரில் அதாவது ஐ10 காரில் வந்த போலீசார் எங்களை விசாரித்து விட்டு விடுவதாகச் சொல்லி கல்லிடைக்குறிச்சி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். எங்களை அழைத்துச் செல்லும்போதே, கூனியூர் அருகே அம்பாசமுத்திரம் ஏஎஸ்பி பல்வீர்சிங்கும் ஒரு பொலிரோ வாகனத்தில் எங்களுடன் சேர்ந்து கொண்டு எங்களுக்கு முன்னாள் சென்றார். சுமார் 10 மணியளவில் கல்லிடைக்குறிச்சி காவல் நிலையம் சென்றதும், மாடிப்படி அருகில் வைத்து ஏஎஸ்பி பல்வீர்சிங் எங்களை ஆடைகளை அவிழ்க்கச் சொல்லிவிட்டு ஜட்டியுடன் நிற்க வைத்தார். பின்னர் அவர்களை மேலே கூட்டி வாருங்கள் என்று அவர் சொன்னதும், போலீசார் எங்களை காவல் நிலையத்தில் முதல் மாடிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு ஏஎஸ்பி பல்வீர்சிங், சிஐடி காவலர் ராஜ்குமார், ரைட்டர் சுடலை, போலீசார் விக்னேஷ், சதாம், பஷீர், இசக்கி மற்றும் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய இன்னொரு காவலர் ஆகியோர் இருந்தனர். ஏஎஸ்பி பல்வீர்சிங், காவலர் சதாம் என்பவரிடமிருந்து ஒரு பாக்ஸை வாங்கி அதற்குள் இருந்த ஒரு கட்டிங் பிளேயரை எடுத்து லெட்சுமிசங்கரின் மேல்தாடையில் ஒரு பல்லைப் பிடுங்கினார். அவர் வலியால் அலறித்துடித்தார். இரத்தம் வாயிலிருந்து ஆறாகக் கொட்டியது. பின்னர் லத்தியால் ஒரு அடி அடித்தார். ரைட்டர் சுடலை என்பவர் தரையில் சில பேப்பர்களை விரித்து, இரத்தம் பேப்பர்களில் சிந்துமாறு பார்த்துக் கொண்டார். அடுத்து ஏஎஸ்பி பல்வீர்சிங் என்னை வாயைத்திறக்கச் சொன்னார். பல்லைப்பிடுங்கி விடுவார் என்று பயந்துபோய் நான் அவரை கிட்டே வரவிடாமல் தடுக்க முற்பட்டபோது, சிஐடி ராஜ்குமார் என்பவர் டேய் அவரைத் தொடக்கூடாது என்று அதட்டினார். பின்னர் ஏஎஸ்பி பல்வீர்சிங் என் வாய்க்குள் கட்டிங் பிளேயரை விட்டு, வலது கீழ்தாடையில் ஒரே நேரத்தில் 3 பற்களைப் பிடுங்கி விட்டார். பற்களைப் பிடுங்கும் போது நரம்பு அறுந்தோ, காய்ச்சல் வந்தோ, ஹார்ட் அட்டாக் ஏற்பட்டோ சாகக்கூடும் என்றும் நன்றாகத் தெரிந்திருந்தும், பிரசவ வலியை விட பல்லைப் புடுங்கும் போது ஏற்படும் வலி கொடுமையான வலி என்று நன்றாகத் தெரிந்திருந்தும், கொஞ்சமும் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் என்னைக் கொலை செய்யும் நோக்கத்துடன் 3 பற்களைப் பிடுங்கி விட்டார். பிடுங்கப்பட்ட பற்களின் அருகில் உள்ள சில பற்கள் ஆடவும்

ஆரம்பித்து விட்டன. வாயிலிருந்து இரத்தும் கொட்டோ கொட்டேன்று கொட்டியது. ரைட்டர் சுடலையோ சிரித்தவாறே கீழே இரத்தம் படாதவாறு பேப்பர்களை விரித்தார். நான் வலியில் அலறித்துடித்தேன். பின்னர் ஏஎஸ்பி பல்வீர்சிங் லத்தியால் 1 அடி அடித்தார். மூன்றாவதாக ஏஎஸ்பி பல்வீர்சிங் பற்களைப் பிடுங்க வெங்கடேஷ் என்பவரை அழைத்த போது, வெங்கடேஷ் தன்னை விட்டு விடுமாறு அவர் காலில் விழுந்து கெஞ்சினார். உடனே வெங்கடேஷின் காதில் கட்டிங் பிளேயரால் அழுத்திப் பிடித்தார். பின்னர் வெங்கடேஷின் முதுகில் கட்டிங் பிளேயரால் பிடித்து தூக்கினார். எனினும் வெங்கடேஷ் வாயைத்திறக்க மறுத்ததால் எங்களிடம் வந்து, அவன வாயத்தொறக்கச் சொல்லுங்க, இல்லன்னா உங்களுக்கு இன்னும் 3 பல்ல புடுங்கிருவேன் என்று மிரட்டினார். அதனால் அச்சமடைந்த நாங்கள் வெங்கடேஷை வாயைத்திறக்கச் சொல்லி அழுதோம். அவரும் வாயைத் திறந்ததும், கீழ்த்தாடையில் அவருக்கு 3 பற்களை பிடுங்கினார். அவர் அலறித்துடித்தார். இரத்தம் ஆறாகக் கொட்டியது. சத்தம் போடாதே என்று ஏஎஸ்பி அவரை லத்தியால் 3 அடி அடித்தார். ரைட்டர் சுடலை வழக்கம்போல கீழே பேப்பர்களை விரித்தார். பின்னர் ஆளாளுக்கு திட்டினர். இனிமேல் ஏதாவது குருப் பார்ம் பண்ணினால் உங்களுக்கு சாவுதான் என்று வர்மித்தனர். பின்னர் எங்களை பாத்ரூமிற்குச் சென்று எங்கள் வாய், முகம் உடலைக் கழுவச் சொல்லிவிட்டு, கீழே சிதறிக் கிடந்த இரத்தத்தையும் எங்களையே கழுவி விடச் செய்தனர். நாங்களும் கழுவி விட்டோம். பின்னர் காலை 10.45 போல காவல் ஆய்வாளர் ராஜகுமாரி வந்து மாத்திரை கொடுத்தார். கூல்டிரிங்ஸ் வாங்கிக் கொடுத்து குடிக்கச் சொன்னார். டிரஸ் எடுத்துக் கொடுத்து அங்கேயே அமர வைத்தார்கள். அதன்பின்னர் சுமார் 4 மணிபோல எங்கள் மூவரையும் ஆய்வாளர் ராஜகுமாரி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு வார்டு எண் 52-ல் உள்நோயாளியாகச் சேர்த்தனர். பின்னர் அடுத்த நாள் அதாவது 24.03.2023 காலை 7 மணியைப் போல வேறு ஒரு வார்டுக்கு மாற்றிவிட்டனர். அவ்வப்போது ஆய்வாளர் ராஜகுமாரி வந்து பார்த்துக் கொண்டார். பின்னர் எங்களிடம் வந்து, நாங்கள் டிஸ்சார்ஜ் ஆகிக்கொள்கிறோம் என்று டாக்டரிடம் நீங்களாகவே சொல்லுங்கள் என்று சொல்லச் சொன்னதின் பேரில் நாங்களும் டாக்டரிடம் அப்படியே சொன்னோம்.

அதன்பின்னர் சுமார் 3 மணியைப் போல எங்களை டிஸ்சார்ஜ் செய்தார்கள். அதன்பின்னர் ஆய்வாளரும், சிறப்புப்படை காவலர் ஒருவரும் எங்களை அவர்களது ஜீப்பில் அழைத்துக் கொண்டு கல்லிடைக்குறிச்சி நோக்கிச் சென்றார்கள். சுமார் 4.30 மணியைப் போல கரம்பை என்ற ஊர் அருகே வைத்து எங்களை காவல்துறை வாகனத்திலிருந்து இறக்கி ஒரு இண்டிகா காரில் ஏற்றி, டானா-ஆம்பூர் ரோட்டில் சிறிது தூரம் அழைத்துச் சென்றார்கள். அங்கே அரசு வழக்கறிஞர் திருமலைக்குமார், அவரது உதவியாளர்கள் கணேசன் மற்றும் இன்னொரு வக்கீல் இருந்தனர். எனது மனைவி சங்கீதா, வெங்கடேஷ் மனைவி மற்றும் அம்மா, திமுக ஒன்றிய சேர்மன் பரணிசேகர் மகன் பாண்டி ஆகியோர் இருந்தனர். பின்னர் அவர்கள் காலில் எங்கள் மூவரையும் ஏற்றிக்கொண்டு, நாங்கள் வந்த இண்டிகா காரில் எங்கள் வீட்டாரை ஏற்றி அவர்களை அனுப்பி வைத்தனர். பின்னர் எங்களை அழைத்துக் கொண்டுபோய் பாபநாசம் விஜய் லாட்ஜில் சுமார் மாலை 6.45 போல தங்க வைத்தனர். எங்களுடன் வக்கீல் கணேசனும், இன்னொரு வக்கீலும் தங்கிக் கொண்டனர். பின்னர் 10.30 க்கு மேல் எங்களை பாபநாசம் சேனைத்தலைவர் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு வைத்து நாங்கள் வாகனத்திலிருந்து கீழே விழுந்தது போல சில ஆவணங்களைத் தயாரித்து எங்களிடமும், எங்கள் வீட்டாரிடமும் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். அங்கு போலி ஆவணங்களைத் தயாரித்தது காவல் ஆய்வாளர் ராஜகுமாரி ஆவார். அவருடன் அரசு வழக்கறிஞர் திருமலைக்குமார், எஸ்ஐ ஆபிரஹாம் ஜோசப் மற்றும் சில போலீசார் இருந்தனர். பின்னர் எங்களை 25.03.2023 அதிகாலை சுமார் 00.30 மணியளவில் எங்கள் வீட்டாருடன் அனுப்பி வைத்தனர். அனுப்பி வைக்கும்போது, பல்புடுங்கியதை வெளியில் சொல்லக்கூடாது என்றும், 1 வாரத்திற்கு உள்ளூரில் இருக்கக் கூடாது என்றும், நாளை காலை கூப்பிடும் போது மட்டும் காவல் நிலையத்திற்கு வர வேண்டுமென்றும், மீறி செயல்பட்டால் குண்டாஸ் அடித்து விடுவோம் என்றும் மிரட்டி அனுப்பினர். பின்னர் 25.03.2023 மதியம் சுமார் 1 மணியளவில் மணிமுத்தாறு கேம்ப் போலீஸ் கேண்டின் அருகில் வைத்து வைத்தியச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறி வக்கீல் திருமலைக்குமாரும், ஆய்வாளர் ராஜகுமாரியும், எஸ்ஐ ஆபிரஹாம் ஜோசப்பும் எங்கள் மூவருக்கும் தலா முப்பதாயிரம்

கொடுத்தனர். அதனை சிஜடி ராஜ்குமார் தன் போனில் வீடியோ எடுத்தார். பின்னர் இதுகுறித்து யாரிடமும் சொல்லக்கூடாது என்றும் வெளியில் சொன்னால் உறுதியாக குண்டாஸ் போட்டு விடுவோம் என்றும் மிரட்டி அனுப்பினர். நானும் ஒரிரு நாட்கள் அவர்களுக்குப் பயந்து போய் அமைதியாக இருந்தேன். தற்போது என்னைப் போல பாதிக்கப்பட்ட பலரும் துணிந்து புகார் அளிக்க முன்வருவதால் நானும் துணிந்து புகார் அளிக்க முன் வந்தேன். எனக்கு ஏஎஸ்பி பல்வீர்சிங் பிடுங்கிய 3 பற்களை ஒட்டி அதன் காரணமாக ஆடிக் கொண்டிருந்த ஒரு பல்லையும் டாக்டர் பிடுங்கி விடடார். மேலும் எனக்கு 14 பற்கள் பிடுங்கி நடப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். என்னையும், என் நண்பர்களையும் பற்களைப் பிடுங்கி சித்ரவதை செய்து எங்களைக் கொலை செய்ய முயன்றதோடு, நிரந்தர ஊனத்தை ஏற்படுத்திய மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமானதாகும். தற்போது புகார் அளிக்கக்கூடாது என்று போலீசார் என்னை மிரட்டி வருகிறார்கள். போலீசாரால் என் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து நேரிட வாய்ப்புள்ளது. ஆகையால் மதிப்பிற்குரிய ஐயா அவர்கள், என் மீது கருணைகூர்ந்து எங்களைப் பற்களைப் பிடுங்கி சித்ரவதை செய்து, கொலை செய்ய முற்பட்ட மேற்படி ஏஎஸ்பி பல்வீர்சிங் உள்ளிட்ட போலீசார் மீது வழக்குப்பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுத்து என் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தந்து நீதி வழங்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (sd) E.Subash திருநெல்வேலி 29.03.2023. Sir, Received and Perused a Petition and Registered a case in Tirunelveli DCB Cr.NO- 01/ 2023 U/S. 323, 324, 326, 506(1) IPC on 17.04.2023 at 12.00 hrs (sd ).Pon.Ragu, DSP/DCB 17.04.2023.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் -1 திருநெல்வேலி அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் , மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

பாதிக்கப்பட்ட பலரும் துணிந்து புகார் அளிக்க முன்வருவதால் நானும் துணிந்து புகார் அளிக்க முன் வந்தேன். எனக்கு ஏஎஸ்பி பல்வீர்சிங் பிடுங்கிய 3 பற்களை ஒட்டி அதன் காரணமாக ஆடிக் கொண்டிருந்த ஒரு பல்லையும் டாக்டர் பிடுங்கி விட்டார். மேலும் எனக்கு 14 பற்கள் பிடுங்கி நடப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். என்னையும், என் நண்பர்களையும் பற்களைப் பிடுங்கி சித்ரவதை செய்து எங்களைக் கொலை செய்ய முயன்றதோடு, நிரந்தர ஊனத்தை ஏற்படுத்திய மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமானதாகும். தற்போது புகார் அளிக்கக்கூடாது என்று போலீசார் என்னை மிரட்டி வருகிறார்கள். போலீசாரால் என் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து நேரிட வாய்ப்புள்ளது. ஆகையால் மதிப்பிற்குரிய ஐயா அவர்கள், என் மீது கருணைகூர்ந்து எங்களைப் பற்களைப் பிடுங்கி சித்ரவதை செய்து, கொலை செய்ய முற்பட்ட மேற்படி ஏஎஸ்பி பல்வீர்சிங் உள்ளிட்ட போலீசார் மீது வழக்குப்பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுத்து என் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தந்து நீதி வழங்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (sd) E.Subash திருநெல்வேலி 29.03.2023. Sir, Received and Perused a Petition and Registered a case in Tirunelveli DCB Cr.NO-01/ 2023 U/S. 323, 324, 326, 506(1) IPC on 17.04.2023 at 12.00 hrs (sd ).Pon.Ragu, DSP/DCB 17.04.2023.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் -1 திருநெல்வேலி அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் , மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in Item No.2, registered case and took up the investigation.
எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb Impression of the Complainant/Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Sta
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name / பெயர் : PON RAGU

15. Date & Time of despatch to the court: 17-04-2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

(True copy)

Rank / நிலை : DSP

No.: / எண்

Deputy Superintendent of Police
District Crime Branch
Tirunelveli District